தெணியான்

இதழ் 1

தெணியான்

# இடி முழக்கம்

- கலை இலக்கிய காலாண்டு இதழ்
- உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி 11-ம் வகுப்பு மாணவ மன்ற வெளியீடு
- புதுமைக் கருத்துகளும் எழுச்சிகளும் நிறைந்தது.

## போசகரின் ஆசிச் செய்தி-

உங்கள் இடிமுழக்கத்திற்கு வாழ்த்துச் செய்தி தருவதில் பெரிதும் மகிழ்வு எய்துகிறேன். உங்கள் சஞ்சிகைக்கு 'இடி முழக்கம்' என்னும் பெயர் பொருத்தமான ஒன்றே. வெடி முழக்கத்திலோ அல்லது தொடி முழக்கத்திலோ உங்கள் உள்ளம் படியவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. உள்ளமாகிய வானிலே உண்மை அறிவாகிய இடியை முழங்கச்செய்து ஒழுக்கமாகிய மழையைப் பெய்வித்து பண்பாகிய பயிரை வளர்ப்பீர்களாக.

— சி. விநாயகமூர்த்தி

## 11-ம் வகுப்பு மாணவ மன்றத்தின்

# நடப்பு வருட நிர்வாகிகள் :

தலைவர் :- S. சிவகுமார்

உப தலைவர் :- K. திருநாவுக்கரசு

செயலாளர் :- க. கோபாலசுந்தரம்

உப செயலாளர் :- க. தர்மகுலசிங்கம்

தனாதிகாரி :- V. கணேசன்

உப தனாதிகாரி :- K. மகேஸ்வரன்

தமிழ்ப்பத்திராதிபர் :- மு. நற்குணதயாளன்.

வகுப்புப் பிரதிநிதிகள் :-

1. அ. சந்திரசேகரம் (11-ம் வகுப்பு உயிரியல்)

2. V. சாரதாதேவி (11-ம் கணித வகுப்பு)

### பத்திராதிபர் குழு :-

1. க. தர்மகுலசிங்கம்
2. T. சேனாதிராசா
3. T. காந்திமதி
4. C. K செல்வராசா
5. S. ஜெகன்மோகனதாஸ்
6. V. கணேசதாசன்
7. S. மகாதேவன்
8. K. கிருஷ்ணமூர்த்தி
9. N. மாலினி.

ஆங்கிலப் பத்திராதிபர் :- கு. கமலேஸ்வரி

# "இடி முழக்கம்"
# முழங்குகிறது . . . . .

**வி**ஞ்ஞான மாணவர்களாகிய நாம் இவ்விலக்கிய சஞ்சிகையை வெளியிடுவது மிகச் சிறந்ததொரு காரியம் என்றெண்ணுகிறோம். இலக்கியம் யாருக்கு? என்ற வினு எழுந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இலக்கியம் மக்களுக்குத்தான் என்ற உயரிய அறைகூவலை முன் வைத்துத்தான் இச்சஞ்சிகையைப் படைத்துள்ளோம்.

உலகின் உடமைகளென கருதப்படும் பாட்டாளிகளும் விவசாயப் பெருமக்களும் தம்தொழில்களை செவ்வனே திறம்பட நடத்த மழையை நம்புகிறார்கள். இம் மழை பொழியமுன் ஓர் அத்தாட்சி மிகவும் சத்தத்துடன் பட்டென தோன்றி மறைகிறது.

அதுதான் ''இடி முழக்கம்''

இதேபோல்தான் எம் சஞ்சிகையும் விவசாயிகளுக்கும் இதர பாட்டாளித் தோழர்களுக்கும் தடங்கலற்ற பாதையை வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை

இச் சஞ்சிகையை வெளியிட மிகுந்த உதவி செய்த அதிபர் S. செல்லத்துரை அவர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் எம்மை ஊக்கி உற்சாகப்படுத்திய போசகர் சி. விநாயகமூர்த்தி அவர்களுக்கும் பணஉதவி செய்த மாணவர்களுக்கும் நன்றியை மனமாரத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இதைத் தெளிவுறத் திருத்தித் தந்த ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்,

— பத்திராதிபர் —

**மு. நற்குணதயாளன்**

# உள்ளே


‘‘நன்றி மறத்தலா வேண்டவே வேண்டாம்’’
கட்டுரை — ஜெ. திருக்குமார்

‘கண்ணீரிலெழுத்து’ சிறுகதை
மு. நற்குணதயாளன் (கரவைத்தயா)

‘கானல் நீர்’ — சிறுகதை
— க. கோபாலசுந்தரம்

‘சித்தார்த்தன் காதலில்’ — கட்டுரை
— து. சிறீஸ்கந்தராசா


‘நாட்டுப் பாடல்கள்’ — கட்டுரை
— க. விஜயலட்சுமி

‘மாணவரும் விவசாயமும்’ — கட்டுரை
— கு. கமலேஸ்வரி

‘சாகட்டும் கொடுமைகள்’ — கவிதை
— S. திலகநாதன்

‘சுய ஆதாரம்’ — கட்டுரை
— S. சுதேந்திரன்

‘புவியியல் நோக்கில் மனிதனும் சூழலும்’
கட்டுரை — க. கிருஷ்ணமூர்த்தி



## உயர்திரு ச. செல்லத்துரை

(அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

உயர்வகுப்பு மாணவ உள்ளங்களின் எதிரொலியாகிய இடிமுழக்கத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் உவகை கொள்கிறேன். மாணவ உள்ளங்கள் இடிமுழக்கம் போல் குமுறலாம், ஆனால் அப்படி ஒலிக்கக் கூடாது. உள்ளத்தின் குமுறல்கள் உதட்டிலும் குமுறக் கூடாது. 'யாகாவாராயினும் நாகாக்க' என வள்ளுவர் சொன்னதும் இதற்காகவே. உள்ளத்திலே இடித்து முழங்கிக் குமுறுவன எல்லாம் உதட்டிலே வந்ததும் மற்ற உள்ளங்களையும் உருக்கும் அன்பு மழையாகப் பரிணமித்துப் பொழிய வேண்டும். இன்சொல்லால் உலகம் மகிழும். வன்சொல்லால் மகிழாது. நாம் கனியிருப்பக் காய்கவர்வோராதல் கூடாது. மாணவர் இதை மனதிற் கொள்ளவேண்டும். கொள்வாராயின் அவர் தம்வாழ்வு மலரும்; மாட்சிபெறும். இத்தகைய அன்பு வழியிலே-பண்புப் பாதையிலே-'இடிமுழக்கம்' உங்களை இட்டுச் செல்வதாக.

இங்ஙனம்
ச. செல்லத்துரை
அதிபர்

கட்டுரை

எழுதியவர் : ஜெ. திருக்குமார்
கணிதப் பிரிவு 1-ம் வருடம்

# "நன்றி மறத்தலா ?! வேண்டவே வேண்டாம்"

ஆறறிவு படைத்த மனிதர்களிடம் நன்றி அருகி இருப்பினும் ஓரறிவு குறைந்த நாயிடத்து அது நீங்கவில்லை. "உப்பிட்டவனை உள்ளளவும் மறக்கலாகாது" என்ற உலக மொழியை நடைமுறையில் காட்டுவது நாய். சிறிதளவு உணவிட்டு, சிறியதோர் இடமளித்து சிறைக்கைதியைப்போல் சங்கிலியால் பிணைத்தாலும் கொடுத்த உணவிற்காகவும், கொண்ட இடத்திற்காகவும் தன் உயிருள்ளவரை தன்னை வளர்த்தவனுக்கு சேவை செய்கிறது நாய். இரவிலே கண் விழித்து தன்னை ஆளாக்கியவன் இல்லத்தைக் கண்ணெனக் காக்கிறது. வீட்டைச் சூறையாட வரும் திருடனை ஓயாமல் குரைத்து ஓட்டிவிடுகிறது. இருந்தும் குரைக்கும் ஒலி துயிலைக் கலைத்ததென நாயினை நையப்புடைக்கின்றான் வீட்டுக்காரன். திருடனை ஓட்டியும் பழியைப் பெறுகிறது நாய். பழியும் உதையும் பெற்றதும் அதன் நன்றிமறவாத குணம் அற்று விடுகிறதா? பின்னும் அவனையே வளைய வளையவந்து வாலைக் குழைக்கிறது. உணவு கொடுத்து உதவிய நன்றிக்காக எதுவும் செய்கிறது. மனிதனோ நன்றி செய்தும் நையப்புடைக்கிறான். இவ்விரு பிறவிகளையும் பார்த்துத்தான் தமிழ்மறை இயற்றிய அருந்தமிழ்ப் புலவன்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"
—குறள்

எனப் பாடி வைத்தார்போலும். மல்லிகைச் செடியை வளர்க்கிறோம். அது மணத்தைத் தந்து மகிழ்ச்சியை ஊட்டுகிறது. இதே நேரத்தில் சிலநச்சு மரங்களையும் எம்மையறியாமலேயே வளர்த்து நச்சுக் கனிகளைப் பெற்று எமக்கே வினை தேடுகிறோம். அதாவது மல்லிகை, மாமரம்போன்ற மனிதர்கள் நன்றியுடையவர்கள். நச்சுமரமொத்தவர்கள். நன்றி மறக்கும் நயவஞ்சகர்களாவர்.

நன்றிகெட்ட பிள்ளைகளைப் பார்த்தே "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" எனக் கூறி வைவார்கள். பத்து மாதம் சுமந்து பெற்று நோயிலும் துன்பத்திலும் பங்கு கொண்டு, அல்லும் பகலும் அயராது குழந்தையை வளர்ப்பாள் தாய் அவனே

வளர்ந்து வாலிபனாகி வந்ததும் தாய் படுக்கையில் இருப்பினும் ஒருபிடி, சோற்றுக்காக ஓராயிரம் வீடுகள் அலைந்தாலும் இரக்கமின்றி யிருப்பான். மகனா அவன்-நஞ்சே உருவான நயவஞ்சகன்.

இத்தகைய வஞ்சகனே எட்டப்பன் கட்டப் பொம்மனைக் காட்டிக்கொடுத்த பாவி. பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு பிறந்த மண்ணுக்கு துரோகமிழைத்து வெள்ளையனுக்கு உதவியவன். வெள்ளையனின் தூதுவனாய் மாறுவேடத்தில் வருகிறான் எட்டப்பன் கட்டப்பொம்மன் அவனைக்கண்டு பிடித்துவிடுகிறான். மரணத்தைப் பரிசாக கொடுக்க வேண்டியவன் கருணை கொள்கிறான்; உயிர்ப் பிச்சை அளிக்கிறான். இந்த நன்றியை நாளெல்லாம் போற்றி ''தெய்வமே!'' எனக்கொண்டாட வேண்டிய அந்த உத்தம சொரூபியான பொம்மனை கைதியாக்கி கழுவிலேற்ற வெள்ளையன் முன் கொண்டுவருகிறான் அந்தக் கொடும்பாவி எட்டப்பன். நினைக்கவே நெஞ்சும் கொதிக்கிறது. இன்று உலகம் 'எட்டப்பா துரோகி நீ' எனச் சபிக்கிறது, காறி உமிழ்கிறது.

இந்த நன்றிகெட்ட பிறவிகளுக்கு நல்ல வழிகாட்டிகளாய் வந்தவர்களுமுளர், கர்ணன் என்பான் அவர்களிற் போற்றற்குரியவன். பழிக்கஞ்சி உதறப் பட்டு பெற்றோர் இருந்தும் அனாதையாய் வாழ்ந்தவன் இக் கர்ணன். பிறந்த குலம் தெரியாத நிலையில் பெரிய சபையினில், பல்லோரும் நகைக்க கண்ணீர் மல்க காட்சியளிக்கிறான் கர்ணன். பெற்றோர் பெயர், ஊர் அறியாது பேதலித்து மற்றோர் வசைமொழி கொண்டு கூனிக் குறுகி தளர்ந்து நின்றனன். அத்தகைய அவல நிலையில் அவன் மானம் காத்து அரசனுக்க ஆதரவு அள்ளிச் சொரிகிறான் துரியோதனன். துரியோதனன் வஞ்சகமே யுருவான வகையிலும் தக்க சமையத்தில் கைகொடுத்துதவியதற்காக 'மானம் காத்த தெய்வமே' என அவன் காலடியில் வீழ்ந்து இறுதியில் தன் உயிரையே அவனுக்காக அர்ப்பணித்தான் அவ்வுத்தமன்.

இந்த நன்றியைப் பார்த்துத் தான் வள்ளுவனார்,

'என்நன்றி கொன்றார்க்கும் உய்
வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொண்டமகற்கு'

என்றுபோந்து சென்றார்.

எனவே யாராகிலும் 'நன்றி காத்திடுக' என ஆர்த்து இவ் வண்ணம் முடிக்கின்றேன்.

— முற்றும் —

---

## பொன் மொழி

நமது கலை இலக்கியம் எல்லாம் பரந்துபட்ட பொது மக்களுக்கு, முதன்முதலாக தொழிலாளர் விவசாயிகள் படையினருக்கு உரியவை. அவை தொழிலாளிகள் விவசாயிகள் படையினருக்காக சிருஷ்டிக்கப்படுகின்றன. அவர்களின் உபயோகத்துக்கு உரியவை.

— ஓர் அறிஞர்.

மாணவன்

# சிறுகதை

எழுதியவர்:
மு. நற்குணதயாளன் (கரவைத்தயா)
11ம் வகுப்பு 1ம் வருடம்
உயிரியல் வகுப்பு (கணிதப் பிரிவு)

## "கண்ணீரிலெழுத்து"

மரண ஊர்வலம்... .. ..

அந்த வீதி முடங்கில் சுடலைக்குப் போகும் திக்கில் திரும்பிக் கொண்டிருந்தது. ஒன்றுக்குப் பின் ஒன்ருக மூன்று சவப் பெட்டிகள் சாகும் மனிதப் பிண்டங்களினுல் சுமக்கப்பட்டு நகர்ந்து கொண்டிருந்தது. சூழ வரப்போகும் மனிதர்களின் முகம் இறுகிக் கறுத்து சோக மேயுருவமாக இருந்தது. சவப் பெட்டிகள் ஒவ்வொன்றினதும் முன்பக்கத்தில் வீரமிகு தியாகிகள் என்ற சுலோகம் பெரிய எழுத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. இத்தனைக்கும் பின்னுல் நிலைகுலைந்து கண்ணீர் ஆருக வழிந்தோட தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்துகொண்டிருந்தான் செல்லன். செல்லனின் முகம் பேயறைந்தது போல் இருந்தது இவனது இதயக் குமுறல் கண்களினூடாகப் பீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவனைச் சுற்றிவரப் போவோர் கதைக்கும் வசனங்கள் அவன் காதில் நுழைகின்றன.

"பாவம் விதி வந்துவிட்டது"

"விதி என்னப்பா விதி அநியாயமாகச் சுட்டுச் சாக்காட்டிப் போட்டாங்கள் நேப்பது விதி என்கிருய் விதி"

பேச்சுகள் வளர்ந்தன,

செல்லனின் இதயம் குமுறியது.

அவனுல் வாய்திறந்து ஒரு வார்த்தையாவது பேச முடியவில்லை. தான் உயிருக்குயிராக வளர்த்த தன் பிள்ளை பிணமாகப் பாடையிலே போகுங்காட்சியை அவனுல் தாங்க முடியவில்லை .. ... சகிக்க முடியவில்லை. இருகைகளாலும் தலைமேல் ஓங்கியடித்தான். இத்தனைக்கும் அப்போ நடந்த நிகழ்ச்சிதான் காரணம்.. ..

யூனியன் தொழிலாளர்கள் (சங்கக்கடை தொழிலாளர்) யாவரும் வேலை முடித்து துண்டுகளை உதறியவாறு தங்கள் பணங்களைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். செல்லனும் அவர்களில் ஒருவன்தான்.

நாள் பூரா மூட்டைகளைச்சுமந்து விட்டு வீடு போவதற்காகப் பணம் வாங்க மனேச்சரின் முன்னுல் சென்ருன். அப்போது செல்லனின் மூத்தமகன் தலைதெறிக்க 'அப்புச்சி ... அப்புச்சி" என்று குரல் வைத்துக்கொண்டு ஓடி

வந்தான் எல்லாத்தொழிலாளர்களினது கண்களும் அவனை மொய்த்தன.

''என்னடா மோனை என்ன நடந்தது?''

இப்படி அவன் கேட்டு முடிக்கவில்லை அதற்கு முன் அவனுடைய கேள்விக்குப் பதில் பின்னால் வந்த கூட்டத்தினரின் குரல்வைப்புக் களிலிருந்து பிரதிபலித்தது.

''டேய் நில்லடா துரும்பா இஞ்சை''

இப்படி ஒருவன் செல்லனின் சாதிப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். அவனின் குரல் அவன் உயர்ந்த வர்க்கத்தைச் சார்ந்தவன் என்பது தெட்டத் தெளிவாகப் புலப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்னும்பலர் கைகளில் கொட்டன்களுடன் கூக்குரல் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

''டேதுரும்பா சண்டித்தனம் காட்டினாய் பேந்தேன்ரா ஓடுகிறாய்'' மீண்டும் அந்த உயர்ந்த வர்க்கத்தைச் சேர்ந்த அந்த வாலிபன் மிருகமாகக் குரல் வைத்தான்.

இவனுடன் சேர்ந்து இன்னும் பல வாலிபர்களு ம்ஒத்துக்குரல் வைத்தார்கள்.

செல்லனின் மகன்போய் செல்லனை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். செல்லனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அடிக்க வந்தவர்களும் நெருங்கி விட்டார்கள் செல்லனோடு வேலை செய்த தொழிலாளர்களிற் சிலர் மெதுவாக நழுவிக்கொண்டிருந்தனர். சிலர் போவதா? விடுவதா? என்ற ஐயத்துடன் செல்லனைப் பார்ப்பதும் அவனை அடிக்க வந்தவர்களைப் பார்ப்பதுமாக இடை நடுவில் நின்றிருந்தனர். சிலர் செல்லனுக்குப் பக்கத்தில் வந்து நின்று 'நாங்கள் எதுக்கும் தயார்' என்று சொல்வதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு நின்றார்கள். அடிக்க வந்தவர்கள் இப்போ மிகவும் அருகில் வந்துவிட்டார்கள்.

செல்லனுக்கு அசாதாரணமான தைரியம் வந்துவிட்டது. செல்லனின் கைகள் அவன் கட்டிய சாரத்தை எடுத்து மெதுவாகக் கோவணம் கட்டியது. அப்போ அவனது முகத்தில் உயிரை வெறுத்த நிழல் ஆடியது. அவனது படிப்படியான செய்கைகளைப் பார்த்த சண்டியர்கள் (செல்லனின் மகளைத் துரத்தியவர்கள்) மனதிற் சாடையாக பள்ளம்விள ஆரம்பித்தது. எவ்வளவோ வேகமாக ஓடிவந்தார்கள். இப்போது சற்று தயங்கினார்கள் என்றாலும் 'துரும்பருக்குப் பயப்படவோ'' என்ற சாதித் தைரியம் மனதிலெழும்ப ''என்னடா துரும்பா கோவணம் கட்டிறாய்'' என்று கத்தினான் ஒருவன்.

''நயினாருக்குச் சோறுபோட''

செல்லனது வாயிலிருந்து புறப்பட்ட இந்த நக்கல் வார்த்தைகள் அவர்களைப் படீரெனச் சுட்டது.

அவர்களுக்கும் தைரியம்வந்து விட்டது.

துரும்புக்கு உவ்வளவு வந்து விட்டதோ என்று கேட்டவாறே கையில் வைத்திருந்த கொட்டனால் செல்லனின் மண்டையில் அடிக்க ஓங்க...... இதைப் பார்த்துக்கொண்டிருந்த செல்லனின் மகன் ''அப்புச்சி'' என்று கதறியவாறு செல்லனுக்கு முன்னால் பாய்ந்தான். பாவம்! செல்லனுக்குவிழவேண்டிய அடி அவன் மகனைப் பதம் பார்த்துவிட்டது.

''ஐயோ என்றலறிக்கொண்டு விழுந்தான்.''

கண்ணிமைக்கு முன் நடந்த இந்த நிகழ்ச்சி செல்லனின் உள்ளத்தில் இனம்புரியாதொரு கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது. செல்லனின் உணர்ச்சிகள் துள்ளிப் பாய்ந்தன.

அவனது உணர்ச்சிக் கொந்தளிப்பின் முடிவு பட்டியில் கட்டிய மாடு அவிட்டு விடப்பட்டால்...... பலநாள் உணவு உண்ணாத சிங்கத்தின்முன் மான் போல்......பருந்தின்வாயில் குஞ்சுபட்டால்...... அடிபட்ட நாகம் துள்ளியெழும்பினால் யாதுநடைபெறுமோ..............

அதுதான் அவனது கொந்தளிப்பின் முடிவும் செல்லனின் கோபம் உச்சத்தையடைந்தது. தன்னுயிரை வெறுத்து தன் மகனை அடித்தவர்கள்மேல் மின்னெப் பாய்ந்தான். அவனதுகைகள் பம்பரம் போன்று சுழன்றது. கூடநின்ற தொழிலாளர்களும் செல்லனின் உணர்ச்சி வேகம் கண்டு தாங்கள் பேசாமல் நிற்பதையும் பார்த்து வெட்கி அவர்களும் அடிபிடியில் இறங்கினர்.

பாவம்! வெருண்டகாளை மாட்டின்முன் பசுபாடு எம்மாத்திரம் அடிக்கவந்தவர்கள் அங்கும் இங்கும் சிதறினர்கள் யாராலும் அந்தத் தொழிலாளக் கும்பலுடன் எதிர்த்து நிற்க முடியவில்லை. அப்போது செல்லனும் காயம்பட்ட தொழிலாளர்களும் அடிபட்டு விழுந்த செல்லனின் மகனும் மட்டுந்தான் எஞ்சி யிருந்தார்கள். செல்லனின் மண்டையிலிருந்து குருதி கசிந்து கொண்டிருந்தது. எல்லோருமாகச் சேர்ந்து செல்லனின் மகனைத் தூக்கிக்கொண்டுபோனர்கள்.

மறுநாள் :-

யூனியன் முன்றல் வெறிச்சோடிப்போயிருந்தது. சாமான் லொறிகள் வந்து வரிசை வரிசையாக நின்றிருந்தன. துரும்புகளை வேலைக்கு விடமாட்டோம் இப்படிச் சில உயர்சாதி வாலிபர்கள் கையில் கொட்டன்களுடன் கதைத்துக்கொண்டு ரோந்துசுற்றும் பொலிசார்போல் அந்தவீதிகளில் திரிந்தார்கள். அந்தக் கிராமமே கொந்தளிப்பாக விருந்தது.

''கீழ்ச் சாதியான் மேல்சாதியானுக்கு அடிச்சுப்போட்டானும்''

இது அங்கும் இங்கும் அலையும் வார்த்தைகள்.

கீழ்ச்சாதி மக்கள் யாரும் அன்று வீட்டை விட்டுக் கிளம்பவேயில்லை. இருப்பதைத் தின்று கொண்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

ஊரிலுள்ள உயர்சாதிப் பிரமுகர்கள் எல்லோரும் ஒன்று கூடி யூனியன் வேலையை உயர்சாதி வாலிபர்களே செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள். உயர்சாதி வாலிபர்களும் இதற்குச் சம்மதித்து விட்டார்கள். வேலைகளும் ஆரம்பமாகியது. லொறிகளில் உள்ள சாமான்கள் யாவும் துரிதமாக இறக்கப்பட்டன. இவ்வளவு நாளும் சும்மா சாப்பிட்டுவிட்டு இருந்தவர்களுக்கு இப்போதுதான் கஷ்டம் என்றால் என்ன என்பதன் அர்த்தம் விளங்கியது. நாட்களும் அகன்று கொண்டிருந்தன. இன்றும் எவ்வித சமரசமும் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் மூட்டை சுமப்பதற்கு உயர் சாதியைச் சேர்ந்த ஐம்பது வாலிபர்கள் முன்வந்தார்கள். ஆனால் இப்போது ஐந்து வாலிபர் தான் மீந்திருந்தார்கள்.

கீழ் சாதியினரை ஒடுக்குவதில் மேல்சாதியினர் எல்லோரும் ஒத்துநின்றனர். ஒருபக்கத்தால் பணம் சேர்க்கப்பட்டது. மற்றொரு பக்கத்தால் ஆயுதங்கள் சேர்க்கப்பட்டது.

எவ்வளவு நாட்களென்று கீழ்சாதியினர் உணவு உண்ணுமல் இருப்பது. எனவே ஒரு நாள் எல்லோரும் கூடினர். இது எப்படியோ உயர்சாதியினரிடையேயும் பரவிவிட்டது. ''ஏதோ திட்டம் போடுகிருன்களாம்'' இதுதான் ஊரில் எழுந்த கதை. கீழ்சாதியினர் எல்லோரும் சேர்ந்து கதைத்துக்கொண்டிருந்தபோது இரவு பன்னிரண்டு மணியிருக்கும்.

திடீரென்று அண்டசராசரங்கள் யாவும் அசையும் வண்ணமாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் மூன்று முழங்கின. இதைத் தொடர்ந்து ''ஐயோ .........ஆத்தையிரோ ......... சுட்டுப்போட்டாங்கள்'' என்று அவலக் குரல்கள் இடையருது எழும்பின.

இதன் பிரதி பலன் தான் இதோ மூன்று பிரேதங்கள் பாடையிலே போகின்றன. வாசகர்களே பார்த்தீர்களா கொடுமையின் ரூபத்தை அந்தக் கொடுமைகளை எதிர்த்து நீங்

கள் புறப்பட வேண்டாமா ஏன் இருக்கிறீர்கள் ம்......ம் புறப்படுங்கள். மரண ஊர்வலம் சென்றுகொண்டிருக்கின்றது. தம் இனத்துக்காக தம் உரிமை ஈய்ந்த மூன்று வீரத் தியாகிகளை முன்னழைத்துச் செல்கின்றது. ஊர்வலம் சந்தியைஅடைகிறது.

செல்லனின் தலை நிமிர்கின்றது.

அவனது கண்கள் சுற்றிவர நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்த உயர் சாதியினரைப் பார்த்துக்காறித் துப்புகிறது.

ஊர்வலத்தில் வந்தவர்களுடைய முகங்களில் காணப்பட்ட சோகக் களை மறைந்து பல நாள் உணவுண்ணாத சிங்கத்தின் முன் மான் போனால் அது என்னசெய்ய எத்தனிக்குமோ அதேபோல் அவர்களும் சுற்றிவர நிற்கும் உயர் சாதியினரைப் பிடித்துத் தின்போமா என்ற எண்ணத்தைப் பிரதிபலித்தனர்.

செல்லனின் கண்களில் கண்ணீர் பனிக்கின்றது. அந்தக் கண்ணீரில் ''**வெற்றிகளையடைய வேண்டுமாயின் தியாகங்கள் அவசியம்**'' என்ற எழுத்துதோன்றுவதுபோல ஒரு பிரேமை.

-முற்றும்-

## பொன் மொழி

கலை, இலக்கியம், முழுப்புரட்சி யந்திரத்தினது ஒரு பகுதியாக நன்கு அமையவேண்டும். மக்களை ஐக்கியப்படுத்தி, போதித்து எதிரியைத் தாக்கி அமுக்கும் சக்தி மிக்க ஆயுதமாகச் செயல்பட வேண்டும். மக்களின் ஒரே மனம் ஒரே உள்ளத்துடன் எதிரியை எதிர்க்கத்துணைபுரியவேண்டும்.

— ஓர் அறிஞர் —

வாழ்வோம் - வாழ்வோம்

# சிறுகதை

எழுதியவர்:- க. கோபாலசுந்தரம்

[11-ம் வகுப்பு (1-ம் வருடம்)]

உயிரியல் வகுப்பு (கணித பிரிவு)

# கானல் நீர்

எட்டுத்திக்கும் புகழ்பரப்பிய கலாசாலை மாணவர்களின் 'கானல் நீர்' என்ற காதல் நாடகம் இருபத்தொரு தடவையாக மேடை யேற்றப்பட விருக்கிறது ஹாலில் நிறைந்து வடிந்து கொண்டு இருந்த மக்கள் கூட்டம் ஆரவாரம் செய்து கொண்டிருந்தது. காரணம் ஏழுமணியாகியும் நாடகம் தொடங்காததே யாகும்.

கதாநாயகன் கலைச்செல்வன் ஒப்பனை அறையில் ஒய்யாரமாக சிகரட்டை புகைத்துக் கொண்டு நின்றான். அதே யறையில் ஆடைகளை அணிந்து கொண்டு நின்ற கதாநாயகி கலைச் செல்வி காதல் பொங்கக் கடைக் கண்களால் அவனையே கவனிக்கிறாள். அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது கலைச் செல்வனுக்குத் தெரியும். எங்கு பார்த்தாலும் கலைச் செல்வன் கலைச் செல்வி காதல் பற்றிப் பேசாதவர்களேயில்லை. அவனுக்கு முன்பும் எத்தனையோ பேர் கதைத்திருக்கிறார்கள். அவன் அதை வேண்டா வெறுப்பாகக் கேட்டுக் கொண்டு நிற்பான். ஆனால் கலைச் செல்வி தன்னுடன் கலைச் செல்வனைச் சோடி சேர்த்து எல்லோரும் பேசமாட்டார்களோ வென ஏங்குவாள். ரோமியோவிற்கு யூலியட்போல கலைச் செல்வனுக்கு கலைச் செல்வி என யாராவது பேசினால் கனல் தெறிக்கும் கோபத்தோடு அவர்களையே அவன் பார்ப்பான்? என்ன செய்வதென்றறியாமல் சிறிது நிம்மதிக்காகச் சிகரெட்டை பற்ற வைப்பான்.

'அப்படி என்ன எண்ணிக் கொண்டு நிற்கிறீர்கள் நாடகம் ஆட வேண்டிய நேரமாயிற்றே'

என்ற கலைச் செல்வியின் குரல் கேட்டுத் திரும்பிய கலை செல்வன் 'ஆடவேண்டிய நாடகத்தை ஆடவேண்டியது தானே' என்றவாறு மனச் சரிப்புடன் நாடக அரங்கினுள் அடியெடுத்து வைத்தான். மின்விளக்குகள் அணைந்தன திரைச்சீலை விலகியது நாற்புறமும் கைதட்டலோசை காண்போர் நெஞ்செல்லாம் காட்சிகளுடன் ஒன்றிவிட்டன. நாடகத்தின் கடைசிக் காட்சி அது. கதாநாயகி தன் காதலன் மாண்டு விட்டான் என்ற பொய்ச் செய்தி கேள்விப்பட்டு கலங்குகிறாள். தனது காதல் கானல் நீராகி விட்டது என்ற ஏக்கத்தால் 'கரும்பான என்வாழ்வு வேம்பானதே கதையாகிக் கன

வாகிக் கானல் நீரானதே' என்று பாடிக் கொண்டிருக்கிறாள். அப்போது விமான விபத்தில் மாண்டு விட்டதாக நம்பப்பட்ட கதா நாயகன் வருகிறான். அவனைக் கண்டதும் காதல்கற்பனையுமல்ல கானல் நீருமல்ல என்றவாறே அவனை அரவணைத்து காதல் வசனம் பேசுகிறாள் கதாநாயகி கதாநாயகன் கலைச் செல்வன் பாடு திண்டாட்டமாகிவிட்டது. வேடம் போட்டதற்காக வேண்டா வெறுப்பாக நடித்தான். ஆனால்... அவளோ உள்ளத்தில் உதித்த உண்மையான காதல் உணர்வால் உந்தப்பட்டு அவனை அப்படியே மார்புறத் தழுவிக் கொள்கிறாள். கரகோசம் வானைப் பிளக்கிறது. ஒரு வாறாக நாடகம் முடிந்தது.

முன் வரிசையில் இருந்த கீதா வெளியே வந்தவாறே... 'என்ன இருந்தாலும் அளவுக்கு மீறிய ஆனந்தத்தால் அதிர்ச்சி யேற்பட்டு கதாநாயகி சாவதாகநாடகத்தை முடித்திருக்கக்கூடாது.' என்று தன் அறிவில் பட்டதை வெளியிடுகிறாள். அப்படி இல்லாவிட்டால் நாடகமே நன்றாக இருந்திருக்காதே என்று இன்னொருத்தி கூறுகிறாள் இருவருமாக கலைச் செல்வியைத் தேடிச் செல்கிறார்கள்.

காதல் காட்சியில் உங்கள் நடிப்பு பிரமாதம் என்று நேரிலே வந்து பாராட்டிச் சென்ற இரண்டொரு மாணவர்களையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கலைச் செல்வன் அவன் பட்டபாடு அவனுக் கல்லவா தெரியும். அப்போது அவனைத் தேடிக் கலைச் செல்வி வருகிறாள். அவளைக் கண்டதும் அவனுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. இன்றைக்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்றெண்ணியவாறே.

'வா... கலைச்செல்வி...வா' என்று வரவேற்றான் 'ஏதோ... ஒரு நாளும் இல்லாத திருநாளாய் மலர்ந்த வரவேற்பு' என்றாள் அவள்.

'எல்லாம் காரணத்தோடு தான்' என்றவாறே 'கலைச் செல்வி காதலைப்பற்றி உன் கருத்தென்ன' என்று கேட்டான். 'காதல் என்பது காலையில் தோன்றிக் கருக்கலில் கருவிடும் கருங்குவளை மலரல்ல என்று நீங்கள் தானே சொன்னீர்கள் அதுதான் என்னுடைய கருத்து என்றாள். 'கலைச்செல்வி' உண்மையான காதலன் தன் காதலிக்குத் துரோகம் செய்ய மாட்டான். அப்படித்தானே கலைச்செல்வி' என்று அவன் சொன்ன போது அவளோ உணர்ச்சி வசப்பட்டவளாய் 'உண்மை உண்மை' என்று உளறினாள். 'என்காதலிக்கு என்றைக்கும் தான் துரோகம் செய்யப் போவதில்லை 'என அவன் சொன்னதும் அவனை அணைக்க அவள் அடியெடுத்து வைத்தாள். 'நில்... கலைச்செல்வி நில்... என் காதலி நீயல்ல' அவள் நெஞ்சில் இடிவிழுந்தது போலிருந்தது. இதையே தான் அவன் அடிக்கடி சொன்னபோது வேடிக்கைக்

னாகச் சொல்கிறுன் எனவெண் ணியிருந்தாள் அவள்.

ஆனுல் இன்று அவன் அவளின் கையிலே திருமண அழைப்பிதழைத் தருவானென அவள் நினைக்கவேயில்லை. அவள் அழைப்பிதழைக் கசக்கியவாறே கலங்கும் கண்களுடன் இந்தக் கருங்குரங்கையா் கட்டப் போகி றீர்கள் என்ருள். கலைச் செல்வ னின் முகம் சிவந்தது. ஆத்திரத் திலும் அறிவை இழக்காமல் 'கலைச் செல்வி அன்பு என்ற அரும்பு பூவாகிக் கனியும் போது தான் காதலாகிறது. நீ கருங் குரங் கென்று வர்ணித்தாயே... கோமதி... அவளும் உன்னைப் போல் ஒரு பெண்தான். உனக் குள்ள உணர்ச்சிகள் அவளிடமும் உண்டு. அவள் தென்றல் என்ருல் நான் தேன்மதி அப்படிக் கருத் தொரு மித்த காதலராக இருக் கின்ருேம். ஒரு தலைக் காதல் ஒரு போதும் உருப்படாது. இதை நீ ஒரு நாளும் மறந்து விடாதே' என்றவாறு அந்த அறையை விட்டு விருட்டெனச் சென்ருன்.

எவனைத் தன் உயிருக்குயி ராய்க் காதலித்தாளோ அவனது உள்ளத்தை அறியத் தவறிவிட் டாள் கலைச் செல்வி அவளைப் பொறுத்த மட்டில் அவளது காதல் கானல் நீராகி விட்டது. அப்போது அங்கே கீதா தன் தோழியோடு வருகிருள்.

'கலைச் செல்வி...கானல் நீர் நாடகத்தில் உங்கள் காதல் நடிப்பு... அப்பப்பா... உண்மையி லேயே ஒருதரும் அப்படி நடிக் கமாட்டார்கள் என்ன இருந் தாலும் கலைச் செல்வன் உங்கள் காதலன் தானே அந்தத் துணி வில் தான்... அப்படி நடித்தீர் கள் என்று கிண்டல் செய்த வாறே...சென்றனர். 'கரும் பான என் வாழ்வு வேம்பான தே கதையாகிக் கனவாகிக் கானலானதே...' இப்படி யா ரோ பாடிக் கொண்டு போன தைக் கேட்டுக் கண் கலங்கு கிருள் கண்களைத் துடைத்த வாறே வானத்தைப் பார்க்கிருர் கள். வானத்து தாரகைகள் வர்ண ஜாலம் காட்டிக் கொ ண்டே யிருக்கின்றன. (முற்றும்)

## பொன்மொழி

பிரச்சினைகள் குவிந்து தொல்லைகள் பெருகும் வரை காத்திராமல் அவற்றைத் தீர்க்கவேண்டும். தலை வர்கள் என்போர் இயக்கத்தின் முன்னணியில் செல்ல வேண்டுமேயன்றி பின்தங்கி நிற்கக்கூடாது.

— ஓர் அறிஞர்

செல்லையா அழகு
யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி

**கட்டுரை**

எழுதியவர்:- சிறீஸ்கந்தராசா

வகுப்பு 11-ம் கணிதபிரிவு 1-ம் வருடம்

# "சித்தார்த்தன் காதலில்............"

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை மனிதன் அடைந்தே தீரவேண்டும். அப்பொழுது அவன் தெய்வமாகின்ருன். மக்களின் பால் போன்ற இதயங்களின் ஒளி விளக்காய் அமைகின்ருன். அதனுல் இருள் நீங்கி ஒளி பிறந்து அவர்கள் தம் வாழ்வைத் தெரிந்து நடப்பதற்கு வழித்துணை ஆகின்ருன். இந்த வாழ்வை இந்த உலகத்திலேதான் நாம் பெற வேண்டும். இன்பமும் துன்பமும் நரகலோகமும் சொர்க்க போகமும் இவ்வுலகத்திற்ருன் இருக்கின்றன. இவ்வுலகத்தில் வாழ்கின்ற வாழ்வை நாம் இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்கிருேம். ஒன்று அகவாழ்க்கை மற்றது புறவாழ்க்கை அகவாழ்வை அமைத்துக் கொள்வது அன்பு, புறவாழ்வுக்கு ஆதாரமாய் நிற்பது அறிவு இவ்விரண்டும் கலந்தது முழுவாழ்வு இந்த முழு உண்மையைத் தான் 'ஆசியஜோதி' என்னும் நாலில் உள்ள 'காதல் பிறந்த கதை' என்பதில் இருந்து நாம் தெரிந்து கொள்கின்ருேம். சித்தார்த்தனுடைய முன் வாழ்வு அன்பு வாழ்வு பின் வாழ்வு அறிவு வாழ்வு.

உலகத்தில் பிறந்த உயிர்கள் யாவும் அன்புக்காக ஏங்குகின்றன. இந்த அன்பே செல்லும் இடம் நோக்கிப் பாசம் என்றும், பக்தி என்றும், காதல் என்றும், பற்று என்றும் அழைக்கப்படுகின்றது. முதலில் பிறந்த குழந்தை தாய் அன்புக்காக ஏங்குகின்றது. இதைப்பாசம் என்கின்ருேம். இதே குழந்தை குமரப்பருவம் அடைந்து தான் விரும்பிய பெண்மீது கருத்து ஒருமித்து அன்பு செய்வதைக் காதல் என்கின்ருேம். இந்த நிலை பிறஉலகத் தாக்கங்களினுல் ஏற்படுவதா? அல்லது அகத்தில் எழுகின்ற கருவிலேயே அமைந்து வளர்ந்து வருகின்ற அகத் தூண்டல் சக்திகளினுல் ஆக்கப்படுவதா? என்பது விளங்கவில்லை. இறைவன் அறிவுரை கூறுவதுபோலக் காண்பதற்கு முன் அன்பு வந்ததா? கண்ட பின்னுல் அன்பு வந்ததா? என்பது சொல்ல முடியாத ஒன்ருயினும் வடகடலில் இட்ட நுகத்தில் தென்கடலில் இட்ட கழி வந்து பொருந்திணுற் போல, இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பெறுவதே உண்மை அன்பாகும். இது அருகிலேயே காணப்படுகின்றது. ஆனுல் அறிவும், அழகும், பண்பும் ஒருவரைத் தம்பால் ஈர்க்கும் சக்தி பெற்றமை.

சுத்தோதன மன்னனுடைய ஒரே ஒரு மகனே சித்தார்த்தன் எனப்படும் புத்தன். இறைவன், குழந்தையாகப் பிறப்பார். அன்றேல் உலக ஈடேற்றம் கருதி, தேவரும் இவ்வடிவு தாங்குவர் என்ற உண்மைக்கமையத் தெய்வீக அம்சம் பொருந்தியவனக விளங்கிய புத்தனிடம் அகவுணர்வுத் தூண்டல்கள் இருந்தும், அதனுல் வளர்ச்சி இன்றி, பற்று இன்றி இருந்தது கண்ட அரசன் மனம் கலங்கினுன். அவர் மனம் மாறுவதற்குரிய மாற்று வழிகளை மந்திரசுற்றத்தார் மூலம் ஆராய்ந்தான். ஒரு வழிக்கும் நில்லாது ஓடித்திரியும் மதயானை போன்ற ஆடவர் மனம் ஒரு பெண்ணினுடைய கடைப்பார்வைக்கு அடங்கி விடும் என்ற மந்திரச் சுற்றத்தாரின் அனுபவத்தோடு கூடிய உண்மையை உணர்ந்து கொண்டான்.

மற்றவர்களுக்காக அன்றித் தனக்காகத்தானே, அறிந்து, உணர்ந்து, தெளிந்து கொள்கின்ற பொருட்களிலேதான் மனிதர்களுக்கு அதிக பற்றும் பாசமும் இருப்பதை நாம் காண்கிறேம். அகத்திலேயுள்ள உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய முறையிற் சுற்றியுள்ள சூழல்கள் அமையுமானுல் அதன் வேகம் அதிகமாயிருக்கும். இவற்றை எல்லாம் உணர்ந்ததினுல் தான் அப்பெரும் மன்னன் தன்னுடைய ஆக்ஞாசக்கரம் செல்லக்கூடிய எல்லைவரையுள்ள அழகுள்ள நங்கையர் யாவரும் தத்தம் திறமையைக் காட்டி திறமைக்குரிய பரிசில்களை சித்தார்த்தன் கையினுற் பெற்றுச் செல்லுமாறு பறை அறைந்தனன். இது கேட்டு அழகு நங்கையர், ஆடற்கலையினர், அன்னமெனும் நடையினர், மின்னலெனும் மெல்லிடையினர் அதிகாலை எழுந்து நன்னீர் ஆடி வாசனைகளைத் தூவி செம்பஞ்சுக் குழம்பு அணிந்து அழகுபடுத்தி அந்நகரை வந்தடைந்தனர். எங்குமே பூக்காடு பூந்தோட்டத்திலே பூக்களிருக்கின்றன என்பதற்காக எல்லாப் பூக்களையும் எல்லாரும் விரும்புவதில்லை. ஒரு பூ முகிழ்த்திட தென்பொதிகையிலிருந்து எழுந்து வரும் தென்றலினூடே கலந்து வரும் சந்தணத்தின் மணம் கொடுக்கும். இன்னென்று அள்ளி அணைத்திட எண்ணம் கொள்ளும்படி வண்ணஒளி காட்டி வரவேற்கும் மற்றென்று. ரீங்காரம் பாடிச் சிறகடித்து வரும் தும்பியினைத் தன்பால் ஈர்க்கக்கூடிய சுவைத் தேனைத் தன்னுள் வைத்திருக்கும் இன்னென்று. ஆனுலும் இவை யாவும் பூவல்ல. ''பூ எனப்படுவது பொறிவாழ் பூவே'' அதுபோல பூவையர் எல்லாம் பூவையர் அல்லர். பெண் அல்லர். அன்புமுகம் காட்டி அதிலே பண்பும் சேர்ந்து அழகு மிளிர அறிவு உடையவளாய் விளங்குபவளே பெண் ஆண் என்னும் மந்தையை, ஒழுங்காக வழிநடத்திப் பண்படுத்தும் ஒருத்தியே பெண். அச்சம், மடம், நாணம், பயிர்

ப்பு இந் நான்கும் பெண்பாற்கு உரிய என்ற மொழிக்கிணங்கப் பேசுகிற பழமைப் பெண் பெண்ணன்று.

அச்சத்தால் விறுவிறுத்த பெண்கள் பெறற்கரிய பொருளை இழந்து போகும் நிலை பரிதாபம். அதனாலேதான் பாரதியும் "அச்சமும் நாணமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்றார் போலும் உணராதவரை உணர்விக்க, செய்யாதவர்களைச் செய்விக்கப், பேசாதவர்களைப் பேசுவிக்க புறஉலகத் தூண்டுதல் தேவை. நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத ஞானச் செருக்கும் கொண்ட மாதர் எதிலுமே திறம்புவதில்லை. எதற்குமே சாந்த முகத்தோடு இருந்த அண்ணலைக் காண நேர்கொண்டு சென்று எனக்கு ஈயும் பொருள் இல்லையோ? என்று தாரகை நடு வண்தண்மதி போன்றுவிளங்கிய யசோதை சென்று கேட்டதும் திடுக்குற்றான். திகைப்புற்றான் திகைப்பினால் மயங்கினான். ஒடுங்கியிருந்த உணர்வுகள் விழிப்புற்றன. அதனால் தாமரையன்னாள் முகம்நோக்கி நிமிர்ந்த விழிதன்னில் பட்டுத் தெறித்தது மானின் விழி. எதிர்பாராத நிலை, எதிர்பாராத மனமாற்றம். இந்த நிலைமாற்றத்தால் தன்னிலை தவறிய ஆண்மகன் தன்னிலை பெற்றான். எலும்பு இல்லாத புழுக்கள் வெய்யிலிலே பட்டுத் துடிப்பது போல் அன்பு இல்லாத வாழ்வு மனிதனைத் துன்பத்துள் ஆழ்த்துகின்றது. இந்த அன்பின் பரிணாம வளர்ச்சியில் இரண்டாம் படியே காதல். மனிதன் தெய்வமாக வேண்டுமானால் அருள் உள்ளம் படைத்தவனாய் மாறவேண்டும் "அ" இன்றி "ஆ" இல்லை என்பது போல அன்பு இன்றி அருள் இல்லை. எனவே அவன் முதற்படியாக அன்பை ஏற்றுக் கொண்டான். அதனால் அருள் நிலையை அடைவதற்கு முதற்படியில் கால் வைத்துவிடுகின்றான். தொடர்பு உடையார் மாட்டு வருவது அன்பு. தொடர்பில்லாத பிறிதோர் உயிரினிடத்து வருவது அருள். இடையில் வந்த தொடர்பினால் அன்பு உதயமாகியது சூரியனிடத்து இருந்துவரும் ஒளி சாதாரணமாகப் பஞ்சை எரிப்பது இல்லை. அந்த ஒளியைக் குவிக் கண்ணாடியில் விட்டு சிதறுண்ட ஒளிக் கதிர்கள் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தி செறிவாக்கினால் கீழே உள்ள பஞ்சு எரிகின்றது. அதே போல மனதிலே இருக்கின்ற பலமுகச் சிந்தனைகளைப் பேச்சு மூலமோ பெருமூச்சு மூலமோ பலதிறப் பட்டுப் போகவிடாமல் ஒருமுகப்படுத்தி கண்ணால் விடுகின்றபோது அது பிற பொருள்களை பாதிக்கின்றது அந்த நிலையையே யசோதரை சித்தார்த்தன் கண்ணும் கண்ணும் கலந்த பேச்சினில், பிறந்த காதல் நமக்குப் புலப்படுத்துகின்றது. தூய்மையான அன்பு தூய்மையான உள்ளங்களிலே தான் இருக்கமுடியும். அந்த இனிய மனங்களை யார்? யார்? பெற்று இருக்கின்றார்களோ, அவர்கள் மகிழ்வோடு வாழ்க[ அம் மகிழ்ச்சிகண்டு எழுச்சி பெற்று உயர்வடைந்து புத்தேளிர் வாழும் உலகமாக இப் பூவுலகம்துலங்கட்டும்(முற்றும்)

**கட்டுரை**

எழுதியவர்: க. விஜயலஷ்மி
(உயிரியல் கணித வகுப்பு) 1-ம் வருடம்

# "நாட்டுப் பாடல்கள்"

நாட்டுப் பாடல்கள் படித்துப் பட்டம் பெற்ற பண்டிதர், புலவர்கள் முதலானோர்களின் வாயிலிருந்து வெளிவந்தவையல்ல கல்வியறிவற்ற மக்கள் நாட்டுப்புற தொழிலாளர்கள், நங்கையர் முதலானோர் வாயிலிருந்தும் பெறப்பட்ட பாடல்களே நாட்டுப் பாடல்கள் எனப்படும். இப் பாடல்கள் கல்வியறிவற்ற மக்கள் வாயிலிருந்து வந்தவையாயினும் கருத்துச் செறிந்த பாடல்களாய் அமைந்துள்ளன. நாட்டு மக்களின் உள்ளத்தில் உணர்ச்சிகள் சொற்களாக உருவெடுக்கின்றன. மகிழ்ச்சி ததும்பும் பாடல்கள் ஊற்றெடுக்கின்றன. துயரம் வரும்போது சோக கீதங்கள் எழும்புகின்றன.

யாழ்ப்பாணத்தை அடுத்த ஒரு கிராமத்தில் உடையார் ஒருவர் இருந்தார். அவரிடம் பல ஆடு மாடுகள் இருந்தன. அவற்றை மேய்ப்பதற்கு ஓர் பையன் தேவையாய் இருந்தபடியால் உடையார் வீட்டிற்குப் பசியால் வாடிய ஒரு சிறுவன் வந்தான். பையனைக் கண்ட உடையார் எங்ஙனமாவது அவனை மந்தை மேய்ப்பதற்கு வைக்கவேண்டும் என்பதற்காக தன் மனைவியிடம் இப் பையனுக்கு உணவு கொடுக்கும்படி கூறினார், அதன்படி அவர் மனைவி உணவு கொடுக்கவும் அப்பையன் அளவின்றி உண்டு கொண்டேயிருந்தான்.

உடனே உடையார்

"மட்டுக்கு மட்டுக்கு டையோ டையோ" என்று கூறினார்

உடனே மனைவி

"மருவுமட்டும் மருவுமட்டும் டையோ டையோ" என்றாள்

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பையன்

"கட்டின மாடு கட்டையோடே
காத்தாலேக்கு டையோ டையோ" என்றான்,

இப்பாடல் தற்போதும் மந்தை மேய்க்கும் சிறுவர்களால் பாடப்பட்டு வருகின்றது. இன்னுமோரிடத்தில்

ஊரார் உறங்கையிலே உற்றாரும் தூங்கையிலே
நல்லபாம்பு வேடங்கொண்டு நான்வருவேன் சாமத்திலே

இப்படி ஒரு காதலன் தன் காதலியை நோக்கிப் பாடுகிறான். உடனே அவளும்.. .. .. .. .."நல்லபாம்பு வேடங்கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்

ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்திடுவேன்'' என பதிலுக்குப் பதில் கூறி
விடுகிறாள். உடனே அவனும்

''ஊர்க்குருவி வேடங் கொண்டு உயரப் பறந்தாயானால்
செம்பருந்து வேடங்கொண்டு செந்தூக்காய் தூக்கிடுவேன்

என பதிலுக்குப் பதில் கொடுக்கிறான். உடனே அவளின் கற்பனை சக்தி விரிந்தோட செம்பருந்து வேடம் நீ தாங்கிடின் பூமியைக் கீறி நான் புல்லாக முளைப்பேன் என்று கூறுகிறாள். உடனே அவன் புல் லாக முளைத்தாலும் ... ... ...

''காராம் பசு வேடங்கொண்டு
கடித்திடுவேன் அப்புல்லை'' என கூறுகிறான்.

அவளுக்கோ தப்பவழியில்லை உடனே பெண்மைக்கே உருவான இரங் கற் சுபாவத்தில் இறங்கி அவனோடு வாழ விரும்பி

காராம் பசு நீயானால் கழுத்துமணி நானுவேன் ... என்றும்
ஆலமரத்தடியே அரனிக் செடியாவேன்
அத்திமரம் நானுவேன் அத்தனையும் பிஞ்சாவேன்
நத்திவரும் மச்சானுக்கு முத்துச் சரம் நானுவேன்

என்று தன் விருப்பத்தை தெரிவித்து அவனைச் சரண் அடைகிறாள். இவை இப்படியிருக்க முஸ்லிம் சமுதாயத்தினரின் பகுதியை எடுப் போமாயின் ... ... ... அதில் ... ... ... ஒரு காதலன்

சுற்றி ஒரு வேலி சூழ வர முள் வேலி
எங்கு மொரே வேலி நான் எங்காலே வந்திடட்டும்

என்று கூறுகிறான். இதைக் கேட்ட அவளுக்கு ஏளனச் சிரிப்பு வருகிறது உடனே ... ... ...

''காவல் அரனே கள்வனுக்கு முள்ளரனே
வேலி அரனே மச்சாள் வேண்டுமென்ற கள்வனுக்கு

இப்படிக் கூறுகிறாள். உடனே அவன்

அக்கரையில் கொக்கே அணில் கோதா மாம்பழமே
இக்கரைக்கு வந்தாயென்றால் இனித்தகனி நான்தருவேன்

என்கிறான். உடனே அவள் மச்சான் வைப்பேன்

வாவென்றழைத்திடுவேன் வாசலிலே பாய்தருதேன்
வாப்பா அறிந்தாரென்றால் வாளெடுத்து வீசிடுவார்

என்று தான் பெற்றோருக்குக் கட்டுப்பட்டிருப்பதைத் தெரிவிக் கின்றாள்.

இப்படிப் பலவகையான பாடல்கள் உண்டு. ஒரு இடத்தில்

சிமிட்டாமற் பறப்பாரைக் கண்டீரோ ராசாவே
சிறகொதுக்காமற் பிறப்பாரைக் கண்டேனே மந்திரி

என்று ஒரு நொடிப்பாடலும் உண்டு. (தொடரும்)

கட்டுரை

எழுதியவர்: கு. கமலேஸ்வரி
11-ம் வகுப்பு உயிரியல் (கணிதப்பிரிவு) 1ம் வருடம்

# மாணவரும் விவசாயமும்

எமது நாடு விவசாயநாடு இந்நாடு பண்டை நாட்களிற் பலராலும் போற்றப் பெற்று தானியக் களஞ்சியத்தில் சிறந்து விளங்கியது. ஆனால் அந்தோ! அதன் பரிதாபநிலையைப் பாருங்கள் அது உணவுப் பொருட்களிற்கு பிறநாடுகளின் தயவை எதிர்நோக்கி வழிமேல் விழிவைத்தும் காத்திருப்பதுடன் பணத்திற் பெரும்பகுதியை அந்நிய செலாவாணியில் வீண் வியமாக்குகிறது.

இலங்கையிற் போதிய நிலமுண்டு, வளமுண்டு, உடல் உழைப்பிற்கேற்ற தொழிலாளர் களுக்கோ பஞ்சமில்லை. ஆனால் இவற்றை வீணாக்கிவிட்டு உத்தியோக மோகத்தில் திரிகின்றோம். மாணவர்கள் படிக்க வேண்டும், படித்துப் பட்டம் பெறவேண்டும். படித்தவர்கள் தொடர்ந்து படித்தல் வேண்டும். ஆனால் வேலையற்று தெருதெருவில் அலைந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் விவசாயத்துறையில் முன்னேறல் வேண்டும். மாணவர்களே! உங்களைக் கரம் நீட்டி அழைக்கிறது. விவசாயத்துறை அங்கு மகிழ்ச்சியுடன் பிரவேசியுங்கள் புதுமுயற்சிகளைச் செய்யுங்கள். விவசாயத்தை முன்னேற்ற புதிய கருவிகளைக் கண்டுபிடியுங்கள். உங்கள் தன்னலமற்ற சேவை நாட்டிற்குத் தேவை.

இதற்குச் சாதகமாக இப்பொழுதே பாடசாலைகளில் விவசாயக் கல்வி நன்கு பயிற்றப்படுகின்றது. மாணவர் எல்லோரும் ஏற்றத்தாழ்வு நீங்கி விவசாயத்தை பயில்கின்றார்கள். இங்கு மண்வெட்டி பிடிக்காத கைகள் சிறந்த முறையில் இயங்குவதை அவதானிக்கலாம் வயல்களிலே களைகள் எடுக்கப் பயிற்சி கொடுபடுகின்றது இவ்வாறு மறைந்திருக்கும் ஆற்றல்கள் வெளிப்படுவதைக்காண மகிழ்ச்சிமேல் மகிழ்ச்சி பொங்குகின்றது. விவசாய முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பாடுபடும்போது நாமும்தான் சற்றுப்பாடுபட்டால் என்ன? குறைந்தா போய் விடுவோம்?

எல்லா மாணவர்களும் சில சில வேளைகளில் களை பிடுங்குதல், நாற்று நடும்பணி, அருவி வெட்டுதல் முதலிய முயற்சிகளைப் பழகுவார்களாயின் பிற

காலத்துச் சந்ததியினராகிய இக்காலத்து மாணவர்களால் நாட்டிற்கு எத்தனை கோடி ரூபா பெறுமதியான பணம் கிடைக்கும் பெற்றோர்களின தும், ஆசிரியர்களினதும் பூரண ஒத்துழைப்பைப்பெற முடியுமா யின் சில ஆண்டுகளிற் தனது சுயதேவையைப் பூர்த்தி செய் வதுடன் மட்டும் நில்லாது விவசாயப் பொருட்களை வெளி நாடுகளிற்கு ஏற்றுமதி செய்து எமது பண்டைக் காலப்பெரு மைகளை நிலைநாட்டலாம் என் பதில் சந்தேகமில்லை.

மாணவர்களும் ஆசிரியர் களும் பெருமை பொருந்திய இத்தொழிலில் ஈடுபடுவார்க ளேயானுல் அவர்கள் அநேகம் பயன்களைப் பெறுவார்கள். அவற்றிற் சில நன்மைகளை எடுத்துப் பகர்வோம். விவசா யிகளே, உண்மையாக நாட்டி ற்கு சேவை செய்கிறுர்கள். விவசாயம் செய்வதால் உடலு றுதிபெற்று தற்போதுள்ள பல வகைப்பட்ட நோய்களினுலும் பீடிக்கப்படாமல் இருக்கின்றுர் கள்.அவர்களிடையேசகோதரத் தத்துவ மனப்பான்மை இருப் பதால் அவர்களிற்கிடையே யுள்ள ஏற்றத் தாழ்வு நீங்கி விடுகின்றது. போதிய ஊதியம் கிடைக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பெரு மரக்கன் நாட்டைவிட்டு அஞ்சி வெளியோடுகின்றுன். நட்டப் பயிரின் வளர்ச்சி மக்களின் மனத்திற்கு மிகுந்த மனநிறை வைக் கொடுக்கின்றது. விவ சாயம் செய்பவர்கள். ஒருவருக் கும் அடிமைப்பட்டு அவல மான வாழ்வு வாழத் தேவை யில்லை. சுதந்திரத்துடன் நல் வாழ்வு வாழலாம். அத்துடன் மாணவர்ளே! மறைந்திருக்கும் உங்கள் சக்தி வெளிப்படச் சந் தர்ப்பம் கிடைக்கின்றது.



மாணவர்களே! 'அழையா விருந்தில் நுழையாதே' என்ற படி நீங்கள் உங்களை அழை யாத வேலைகளை தேடியலையா தீர்கள். உங்களை நல்ல வேலை கள் அழைத்தால் அங்கு செல் லுங்கள் இல்லாவிட்டால் உங் களை அழைக்கும் இடம் இருக் கிறது. அதுதான் விவசாயத் துறை.

"ஆற்றங்கரையில் மரமும்
அரசெறிய வீற்றிருந்த
வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வார்க்கு
ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறுேர் பணிக்கு"

என்பது பொன்மொழி யன்றே. இதிலும் உழவுத் தொழிலின் மகிமை அழகுறத் துலக்கப்பட்டிருக்கிறது.

"உழவுக்கும் தொழிலுக் கும் வந்தனைசெய்வோம்-வீணில் உண்டு கழித்திருப்போரை நிந் தனை செய்வோம்"

— என்றும்

"வரம்புயர நீர் உயரும்
நீர் உயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோல் உயரும்
கோலுயரக் கோனுயரும்"
— என்றும்

பண்டைய புலவர்கள் யாத்த பாக்கள் நீர் அறிவீரன்றோ! எனவே உழவுத்தொழிலை இழி தொழிலாகக் கருதாதீர்கள் படிப்பறிவுடன் திறம்பட புதிய புதிய முறையினைக் கையாண்டு விவசாயம் செய்து இன்புற்று வாழுங்கள் இறைவன் மேலாய அவ்வல்லமையை உங்களுக் களித்து இன்புற்று வாழ வழிகள் செய்வாராக.

முற்றும்

**கவிதை**

## சாகட்டும் கொடுமைகள்

சாதி களிங்கு சாகட்டுமென்று — தோழ
சாற்றிடு உலகு அதிர
நீதி களிங்கு உயர்ந்திடவென — தோழ
நீ குரலெழுப்பு நிறைவுடனே

⁂ ⁂ ⁂

போதி மரத்தில் போந்தார் — முனியென
போதிக்கும் பழமைகள் யாவும்
அழிந்திட வேண்டுமென நீ — உன்
அழகிய கரங்களை நீட்டிவிடு.

⁂ ⁂ ⁂

— S. திலகநாதன்
(உயிரியல் வகுப்பு) கணிதப்பிரிவு
1-ம் வருடம்

கட்டுரை

எழுதியவர் : சுரேந்திரன்

11-ம் வகுப்பு (உயிரியல் வகுப்பு, கணிதப் பிரிவு) 1-ம் வருடம்

# "சுய ஆதாரம்"

ஒரு மனிதன் தனது சுதந்திரத்தையும் தன் மானத்தையும் காப்பதற்கு தன் கைகளை-தனது உறுப்பை மட்டுமே நம்பியிருக்க முடியும், இது ஒரு தனி மனிதனின் சுய ஆதாரம். இதேபோல் ஓர் நாடு பிரதானமாக தனது வளங்களையும் தேச மக்களின் உறுப்பையும் கொண்டே தனது சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் பேணிக்கொள்வது அந் நாட்டின் சுய ஆதாரமாகும். எந்த ஒரு நாடும் தனது அபிவிருத்திக்கு அயல் நாடுகள் செய்யும் உதவியையே எதிர்பார்த்து இருக்குமென்றும் அது தனது பூரண சுதந்திரத்தை அனுபவிக்க இயலாமல் இருக்கும். தான் கொடையளிக்கிறேன் என்ற இறுமாப்பில் ஒரு அயல் நாடு எமக்கு கட்டளையிட முற்பட்டால் கட்டளை எதற்கு? தனது சொல்லை நாம் 'மதித்து' நடக்க வேண்டுமென எதிர்பார்த்தாலே போதும் எமது சுதந்திர உரிமைகள் காற்றோடு பறந்து போனதாகவே கருத வேண்டும். இந்த நிலைமைக்கு உலக வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. தேசமக்களின் ஆற்றல்களைக் கொண்டே நாட்டை விருத்தி செய்யலாம் என்றும் சிலர் நம்ப மறுக்கிறார்கள். அது மட்டுமல்ல இந் நாட்டு மக்கள் எல்லோரும் சோம்பேறிகள் கையாலாகாதவர்கள் என்றெல்லாம் பழிக்கிறார்கள். இத்தகையோரைக்கண்டால் பாரதியார் சொன்னரே "மோதி மிதித்து விடுபாப்பா" என்று அதைத் தான் செய்யவேண்டும். நமது நாடு துரிதமாக வளரவேண்டும் என்பதே நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொருவருக்குமுள்ள ஆவல். இதற்கு நாடு தொழில்மயமாக வேண்டும். விவசாயம் நாட்டில் ஓங்கி வளர வேண்டும்,

கடந்த காலத்தின் தொடர்ச்சியே நிகழ்காலம். ஆகவே எதையும் சரித்திர அடிப்படையில் நோக்கும்பொழுது நிலைமை தெளிவுறும். வெள்ளையர்களின் நேரடி ஆட்சி எம்மீது செலுத்தப்பட்ட அக்காலத்தில் இருந்த தொழில் வல்லுனர் உட்பட சகல ஊழியர்களும் வெள்ளையர்களாகவே இருந்தனர். அவர்கள் தமக்குக்கீழ் வேலை செய்த தொழிலாளர்களை 'தீண்டத் தகாதவர்கள்' என்ற போர்வையில் வழிநடத்தினர்கள், வெள்ளையர்கள் தமக்கும் உள்நாட்டவர்க்கும் இடையே ஓர் செயற்கையான இடைவெளி

வர உருவாக்கியதோடு அதைப் பாடுபட்டுக் காக்கவும் செய் தார்கள். தம்மைத் துரைகளா கவும் தமக்குக் கீழே வேலை செய்த ஊழியர்களை அடிமைக ளாகவும்பாவித்தார்கள். மெல்ல மெல்ல வெள்ளையர்கள் இருந்த இடங்கள் உள்நாட்டவர்களுக் கும் பங்கிடப்பட்டன. இவர் கள் என்னசெய்தார்கள்?வாழை யடி வாழையென வராவிடி னும் அதே திருக்கூட்டமரபைத் தொடர்ந்தார்கள். இதனுல் இவர்களுக்கும் துரை மனப் பான்மை தொடர்கிறது. தாம் சிறிதும் மெய்வருந்த வேலை செய்யமாட்டார்கள். தமக்குக் கீழுள்ள ஊழியர்களோடும் சேர்ந்துகொண்டு உடல்வியர்க்க வேலை செய்யத் தயங்குகி ருர்கள். ஆனுல் முன்னேறிய அயல்நாடுகளில்உள்ளசாதாரண தொழில்வல்லுனர்கள் தமக்குக் கீழேயுள்ள பிற ஊழியர்களோ டும் தொழிலாளர்களோடும் சேர்ந்து உடல் வியர்கக் வேலை செய்கிருர்கள். இவர்கள் துரை களைப்போல் இருந்து கட்டளை யிடுவதில்லை. இதற்குக் காரணம் அங்குள்ள தொழிற்துறை வளர்ச் சியாக இருக்கலாம்.

ஆனுல் இதைச் சாட்டாகக் கூறி இங்கே துரை மனப்பான் மையுடன் வேலை செய்பவர்களை நாடு மன்னித்து விடமுடியுமா? முடியாது. இந்தநிலை திருந்தியே ஆகவேண்டும். இதற்குப் பரி காரம் என்ன? “நாயே வாலை நிமிர்த்து” என்று நாய்க்கு உபதேசம் செய்வதில் பிரயோ சனம் இல்லை. உபதேசத்தால் ஒரு நிர்வாகம் திருந்தியதாக சரித்திரம் இல்லை. வெளிநாட் டிலிருந்து வந்தவர்கள் திறமை யாக செயலாற்றியிருந்தாலும் அவர்கள் போன பின்பு மீண் டும் மேற்கே பார்த்துக்கொண் டிருப்பதா?

ஆகவே எம்மிடையே தோன்றியுள்ள இத்தகைய மனப்பான்மை மாற இச் சூழ் நிலை மாறவேண்டும். அதாவது இந்நாட்டு **அரசியல் பொருளா தார அமைப்பையே மாற்றிக் கொள்ள வேண்டும்.** ஆகவே எமக்கு ‘சுய ஆதாரம்’ தேவை யெனில்தூங்கும் மக்களைத்தட்டி யெழுப்பி விடிவுநோக்கி அவர் களை அணிவகுக்க வேண்டும்.

## பொன்மொழி

அறிவு என்பது விஞ்ஞானம் தழுவிய ஒரு விஷயம் இதில் நேர்மையீனமோ செருக்கோ அனுமதிக்க முடியா தவை இதில் உண்மையில் தேவையானது இவற்றிற்கு எதிரானவை — நேர்மை, அடக்கம் - ஆகும்.

**ஓர் அறிஞர்**

கட்டுரை

எழுதியவர்: க. கிருஷ்ணமூர்த்தி
11-ம் கலை வகுப்பு
(1-ம் வருடம்)

# புவியியல் நோக்கில்
# மனிதனும் சூழலும்

மனிதனும் சூழலும் என்று நாம் இங்கு ஆராயும் பொழுது பௌதிகச் சூழலையே முக்கியமாகக் கருதவேண்டியிருக்கிறது புவியியல் என்று கூறும்பொழுது மனிதனுக்கும், பூமிக்கும் உள்ள தொடர்பை ஆராய்வதொன்றாகும். எனவே பௌதிகச் சூழலுடன் மட்டுமல்லாது தாவரம், விலங்கினம் போன்ற உயிரியல் துறைகளுடனும் இப் புவியியல் தொடர்புகொண்டுள்ளது. 19ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் (Ritter and Heembolt) என்னும் இரு ஜேர்மனியர் புவியியல் துறையில் ஒரு கருத்தை வெளியிட்டனர். 1845ம் ஆண்டில் (Heembolt) என்பவர் தான் எழுதிய 'கொஸ்மொஸ்' என்னும் நூலில் ''மனிதன் மீது இயற்கைச் சக்திகள் கொண்ட ஆதிக்கமும், இயற்கையை மனிதன் தன் வளர்ச்சிக்கேற்ப ஆக்கிக்கொள்வதும், மனிதன் எங்கும் புவியியலுக்கேற்ப வாழ்வுடன் தொடர்பு கொண்டிருப்பதையும் இதுகாட்டுகிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து மனிதனுக்கும், சூழலுக்குமுள்ள தொடர்பை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மனிதனையும் சூழலையும் பற்றிக் கூறும் பொழுது நாம் இடம், இடத் தொடர்பையுடைய வளிமண்டலம், காலநிலை, மண்வகைகள், நீர், இடவிளக்கவியல், தாவரங்கள், விலங்கினங்கள், கனிப்பொருட்கள், கடல் என்பனவற்றை மனிதன் தன் அறிவு முதிர்ச்சிக்கேற்பஎவ்வாறுபயன்படுத்துகிறான் என்பதைச் சற்று விரிவாக ஆராய்வாம்.

பூமியில் காணப்படும் நிலவுருவங்களும் மனிதனது வாழ்க்கையை ஓரளவு பாதிக்கின்றது. இந்நிலவுறுப்புக்கள்மலை,மேட்டு நிலம், சமவெளி, பள்ளத் தாக்கு எனப்பல்வேறு வகைப்படும். அதிகமானபயிர்ச் செய்கை நிலங்கள் யாவும் தாழ் நிலத்திலேயே காணப்படுகின்றன. வண்டல் மண் நிறைந்த ஆற்றுப்பள்ளத்தாக்கிலேயே நெல் செழித்து வளரும். ஆனால் தேயிலை, ரப்பர் போன்ற பயிர்கள் செழிப்பாக வளருவதற்கு மலைச்சரிவுகளே ஏற்றது. உதாரணமாக இலங்கையில் மத்திய மலை நாட்டிலேயே தேயிலை செழித்து வளருகிறது. இன்னும் மலைநாட்டில் உஷ்ணம் குறைவாகவும், மழை கூடுதலாகவும்

காணப்படுகிறது. இது விவசாயத்திற்கு ஏற்றதல்ல. மலைப்பிரதேசங்களில் வசந்தம், கோடை காலங்களில் பனி உருகுவதனுல் சில விடங்களை உபயோகப்படுத்தினுலும் மாரியில் மலைப்பனி தோன்றியதும் கமக்காரன் இடம்பெயரவேண்டி நேரிடும். மேட்டு நிலங்களிலும் தாழ்நிலங்களிலும் வெவ்வேறு விதமாகக் கைத்தொழில் நடைபெறுகின்றது. உயர்நிலங்களும் தாழ்வு நிலங்களும் மக்களின் போக்குவரத்தைப் பாதிக்கின்றன. ஆனுல் தற்காலத்தில் மனிதனுல் ஓரளவுக்கு அடக்கி ஆளப்பட்டுள்ளது. முற்காலத்தில் இலங்கையில் மலைநாடு முழுவதும்போக்குவரத்து வசதியற்றதாய்க் காணப்பட்டது. ஆயின் தற்போது புகையிரதப் பாதைகளையும், கணவாய்களையும் அமைத்து மேட்டு நிலங்களையும் போக்குவரவுக்காக உபயோகிக்கின்றனர். இதற்கு கடுகண்ணவைக் கணவாய் ஒரு உதாரணமாகும். இன்னும் மேட்டுநிலங்களிலும் பார்க்க சம வெளிகளிலேயே குடியடர்த்தி காணப்படுகின்றது. இம்மேட்டு நிலத்தில் வாழ்பவர்கள் நாகரிக வளர்ச்சியடையாது தரைத் தோற்றத்தினுல் தடுக்கப்பட்டு வாழ்கின்றனர். இத்தகைய தன்மைகள் யாவும் மக்களிடையே ஏற்படுவதற்கு நிலவுறுப்புக்களாகிய சூழலே காரணமாகவுள்ளது.

இன்னும் காலநிலையும் மனிதனை நேரடியாகப் பாதிக்கின்றது. காலநிலை வேறுபாடுகளுக்கேற்ப மனிதனது தோற்றமும், குணதிசயங்களும் வேறுபடுகின்றன. மக்களிடையே காணப்படும் உடல் வேறுபாடுகளுக்குப் பெற்றோரிடமிருந்து பரம்பரையாகக் காணப்படும் இயல்பு, சூழல் காரணமாகக் காணப்படும் இயல்பு, என இரு காரணம் கூறுவர். இத்தகைய வேறுபாடுகளுக்குச் சூழலே முக்கியமானதாகக் காணக்கூடியதாக இருக்கிறது. மத்திய கோட்டை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்வோர் கருமை நிறமுடையோராகவும், இடை வெப்ப நிலையுள்ள இடங்களில் உதாரணமாக சீனுவில் உள்ளவர்கள் மஞ்சள் நிறமுடையோராகவும் காணப்படுகின்றனர். இடைவெப்ப நிலையுள்ள இடங்களில் காலநிலை அடிக்கடிமாறுவதனுல் அங்கு வாழும்மக்கள் உசித குணமுடையோராய்க் காணப்படுகின்றனர். காலநிலைத் தன்மையால் மத்திய கோட்டை அடுத்த பகுதிகளாகிய அமேசன், கொங்கோ நதிப் பகுதிகள் அடர்ந்த காடாய்க் காணப்படுகின்றது. அதனுல் அங்கு குடியிருப்புக் காணப்படவில்லை. அதேபோன்று ஆபிரிக்காவிலுள்ள சகராப் பாலைவனம் அதிவரண்ட பிரதேசமாகையால் அங்கும் மக்கள் வாழமுடியாதிருக்கின்றது. தாவரம் குறைவாகக் காணப்பட்ட

பகுதிகளில் மக்கள் குடியேறினர். முதல் முதலாக இலங்கையில் மக்கள் வரண்ட பிரதேசங்களிலேயே குடியேறினர். இன்னும் கைத்தொழில், விவசாயம் முதலியவற்றையும் காலநிலை பாதிக்கின்றது. வட அமெரிக்கா. எகிப்து இந்தியா ஆகிய இடங்களில் பருத்தி ஏராளமாகப் பயிரிடப்பட்டாலும் அங்குள்ள காலநிலைத் தன்மையால் அவ்விடங்களில் பருத்தி நெசவு செய்ய முடியாது இருப்பதையும், இங்கிலாந்தி லுள்ள லங்காஷயர் என்னும் பிரதேசத்தில் பருத்தி நெசவு நடை பெறுவதும் இக்கால நிலையின் காரணமேயாகும். அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து வரும் நீரணுப் பொருந்திய காற்று நூல்கள் அறுந்துபோகாது பாதுகாக்கின்றன. எனவே தான் இங்கு பருத்தி நெசவு நடைபெறுகிறது. நிலக்கரி, இரும்பு போன்ற பொருள்கள் கிடைப்பதோடு இக்காலநிலையே இக் கைத்தொழிலைப் பாதிக்கின்றது, இன்னும் காலநிலை வேறுபாட்டிற் கேற்பவே மனிதன் தனது உணவு, உடை உறையுளை அமைத்துக் கொள்கிறான். ஆடிக் பிரதேசத்தில் வாழ்பவர் எஸ்கிமோவர் 'Igloo' என்ற குடிசையிலும். கோடையில் கூடாரங்களிலும் வசிப்பர். பாலைவனங்களில் மழையில்லாத படியினால் கூரையுள்ள வீடுகளை அமைக்கமாட்டார்கள். வெப்பமான பிரதேசங்களில் கற்களினால் பெரும்பாலும் வீடுகளை அமைப்பர். கம்பளி, பட்டு, பருத்தி போன்ற உடைகளை வெவ்வேறு காலநிலையுடைய இடங்களில் அணிவர். இன்னும் இக்கால நிலையானது உள்நாட்டு நீர்நிலைகளைப் பாதிக்கின்றது. இதனால் மக்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வழிகளைத் தம் போக்கு வரவிற்குப்பாவிக்க வேண்டியிருக்கின்றது. இத்தகைய வேறுபாடுகள் தோன்றுவதற்கு இக்கால நிலைகள் காரணமாகவுள்ளன.

மண்வளமும் மக்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகக்காணப்படுகின்றது விவசாயத்துக்கு மணவளம் இன்றியமையாத ஒருசாதனமாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ளசெம்மண்செறிந்த பகுதி வாழை, கத்தரி, புகையிலை போன்ற பயிர்கள் செழிப்பாக வளருவதற்கும், இலங்கையின் கரையோரப் பகுதியாகிய உவர்மண் செறிந்த பகுதிகள் தென்னைச் செய்கைக்கும் ஆற்று வண்டல்கள் படிந்தமண் (Aluvial Salt) நெல் விளைவதற்கும் ஏற்ற இடமாகவும் அமைந்துள்ளது. இன்று இந்தியா, சீனு போன்ற நாடுகள் வண்டல் மண்ணுள்ள இடங்களிலேயே நெல்லை ஏராளமாக விளைவித்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதற்குக் காரணம் யாங்சிக்கியாங், கங்கை நதிகளின் முகத்துவாரத்திலுள்ள வண்டல் மண்ணேயாகும். களிப்பொருட்களாகிய இரும்பு, நிலக்கரி மற்றைய உலோகங்களும் நிலத்தி

லேயே கிடக்கின்றன. இது முக்கியமாகக் காணப்படுவதற்கு இரும்பை நாம் எமது உபயோகத்திலிருந்து அகற்றுவோமேயாகில் நாம் ஆதிகால மனிதனைப்போல ஆகிவிடுவோம். ஆகவே மண் மனிதனது கைத்தொழிலிற்கும் மக்கள் நவீன முறையாக வாழ்வதற்கும் புதிதாகத் தோன்றிய அலுமீனியம், மக்கனீசியம் போன்ற உலோகங்கள் உதவுகின்றன. ஆகாயவிமானம், மோட்டார் வண்டி செய்தற்கும், ஓடு, செங்கற்கள் செய்வதற்கும் மணல் உபயோகப்படுகின்றது. இத்தகைய கனிப்பொருட்கள் மனித வாழ்க்கைக்கும், பொருளாதாரத்திற்கும் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. இவை ஆதிகாலம் தொடக்கம் மக்களின் குடிப் பரம்பலைப் பாதிக்கின்றது. அவுஸ்திரேலியாவில்நாடுகடத்துவோரை அனுப்புமிடமாக இருந்தகால் கூலி கடல் காடிப் பிரதேசம், பொன், தங்கம் கண்டுபிடிக்கப்பட்டபின் சதை செறிவுடைய பிரதேசமாகவும், அப்பலாச்சியஸ் மலைப்பிரதேசத்தில் இரும்பு, நிலக்கரி போன்றவை கிடைப்பதனல் பெரியகைத்தொழிற்சாலைகள் தோன்றுவதற்கும், மத்திய ஆசியாவிலுள்ள (Irag, Iran) போன்ற இடங்கள் எவையெனக் கண்டு எனக் கண்டுபிடிக்கப் பட்டபின் சதை செறிவுடையதாகவும், ஜேர்மனியில் சார், றூர், ஆசஸி, நைலீசியா போன்ற கரிவயல்கள் இருப்பதனல் பெரிய கைத்தொழில் நாடாக விளங்குவதற்கும் இவ்லோகப் பொருள்களே முக்கிய காரணமாகும் இதனல் இவ்விடங்களில் மக்கள் அதிகமாக வாழத் தொடங்கினர். இவை யாவும் மனிதனது முன்னேற்றத்துக்குக் காரணமாகவுள்ளன.

மனிதனது வாழ்க்கைக்கும் நாகரீக வளர்ச்சிக்கும், விவசாயத்திற்கும் நீர் பல்வேறு துறைகளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சமுத்திரமானது நிலத்திற்குத் தேவையான நீரை மழையாகக் கொடுக்கின்றது. இன்னும் நிலப்பரப்பின் வெப்பநிலையைத் தடுப்பதன் மூலமும் காலநிலையை நடுத்தரமாக்குகிறது. சமுத்திர ஓட்டமும் காலநிலையின் வகையினை நிர்ணயிக்கிறது. அத்திலாந்தின் சமுத்திரத்திலுள்ள (Gulf Stream) சுடான குடா நீரோட்டமும் (Latrader) குளிர் நீரோட்டமும் வந்து சந்திக்குமிடத்தில் மீன் பிடிக்கும் துறைகளாகிய நியூயோக், கலிபாக்ஸ் முதலியன காணப்படுகின்றன. இவ்விடங்களில் கடல் ஆழமற்று இருப்பதாலும் மீன்களுக்கேற்ற உணவு ஏராளமாகக் கிடைப்பதனலும் அங்கு மீன்கள் வந்து முட்டையிடுகின்றன. இங்குள்ளவர்கள் மீன்பிடித்தலையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர்.

(தொடரும்)

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ அச்சடித்த
நூலெல்லாம் பூங்காவின் அச்சடிப்போ — மேலோரே
தாரீர் உம'தோடர்' தந்து மகிழ்ந்திடவே
வாரீர் உடனே இவண்.

எத்தகைய அச்சு வேலைகளும்

சுத்தமாக, துரிதமாக

அச்சிட்டுக் கொடுப்பது

"தமிழ்ப் பூங்கா" அச்சகம்

பிரதான வீதி — நெல்லியடி — கரவெட்டி.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 11-ம் வகுப்பு மாணவர்களால் நெல்லியடி தமிழ்ப் பூங்கா அச்சகத்தில் அச்சிட்டு 6-12-70ல் வெளியிடப்பட்டது.